இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599
Email: wordofgod@wordofgod.in

காலே, மாலே ஆராதனே முறைகள்

	பக்கம்
முதலாம் ஆராதனே முறை	1
இரண்டாம் ஆராதனே முறை	1
மூன்றும் ஆராதனே முறை	21

முதலாம் ஆராதனே முறை

தவிருந்து ஆராதனே நடத்தாமலிருந்தால், அவ்வாராதனே முறையின் முதல் இரண்டு (ஆயத்தம், திருவசனப் போதனேப்) பகுதிகளேயும் காலே அல்லது மாலே ஆராதனே முறையாகப் பயன்படுத்தலாம். அப்படிச் செய்தால் (1) பாவ அறிக்கைக் குரிய அழைப்பில் 'ஆண்டவருடைய சரீரத்தையும், இரத்தத்தையும் பெற்றுக் கொள்ளவும்' என்ற சொற்களே விட்டுவிடவும். (2) காணிக்கை படைக்கப் பட்டால், பொருட் காணிக்கையோடு மன்றாட்டு ஜெபத்துக்குப்பின், காணிக்கை படைப்புக்குரிய மன்றாட்டுடன் அதைப் பயபக்தியாய் ஏறெடுக்கவும். ஆராதனே யைப் பாட்டு ஒன்றைப் பாடி, ஆசீர்வாதம் அல்லது அருள் மொழிகள் கூறி முடிக்கவும்.

இரண்டாம் ஆராதனே முறை

துதி

எல்லாரும் எழுந்து நிற்க, ஆராதனே நடத்துகிறவர்:

நாம் கடவுளேத் தொழுவோம்.

திருமறையிலிருந்து பின்வருவன போன்ற ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட திருவசனங்களே ஆராதனே நடத்துகிறவர் வாசிப்பார்:

கடவுள் ஆவியாயிருக்கிருர், அவரைத் தொழுதுகொள்ளுகிற வர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ள வேண்டும். யோ. 4:24

நம்முடைய பிதாவாகிய கடவுளாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. ரோ. 1:7

இது கர்த்தர் உண்டுபண்ணின நாள்; இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம். சங். 118:24

சூரியன் உதிக்கும் திசை தொடங்கி அது அஸ்தமிக்கும் திசைமட்டும் கர்த்தருடைய நாமம் துதிக்கப்படுவதாக. சங். 113:3

கடவுள் ஒளியாயிருக்கிறார். அவரில் எவ்வளவேனும் இருளில்லை. அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம். அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும்.. 1 யோ. 1:5,

அட்வெந்து. கர்த்தர் சமீபமாயிருக்கிறார். நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் கடவுளுக்குத் தெரியப்படுத்துங்கள். பிலி. 4:5,

எஜமான் வரும்போது, விழித்திருக்கிறவர்களாகக் காணப்படுகிற ஊழியக்காரரே பாக்கியவான்கள். லூ. 12:3

கிறிஸ்துவின் பிறப்பு. இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்! இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். லூ. 2:10,1

பிரசன்னத் திருநாள். சூரியன் உதிக்கிற திசை தொடங்கி அது அஸ்தமிக்கிற திசை வரைக்கும் என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும்; எல்லா இடங்களிலும் என் நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும்; என் நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயிருக்கும். மல். 1:1

லெந்து. நீங்கள் உங்கள் வஸ்திரங்களையல்ல, உங்கள் இருதயங்களைக் கிழித்து, உங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்புங்கள்; அவர் இரக்கமும், மன உருக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர்; அவர் தீங்குக்கு மனஸ்தாபப்படுகிறவருமாயிருக்கிறார். யோவேல் 2:1

இயேசு சொன்னார்: 'ஒருவன் என் பின்னே வர விரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக் கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.' மா. 8:3

பாடுபட்ட வாரம். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். 1 பே. 2:2

குருத்தோலை ஞாயிறு. ' ''இதோ, உன் இரட்சிப்பு வருகிறது; இதோ, அவர் அடைந்த பலன் அவரோடிருந்து, அவர் சம்பாதித்தவை அவருக்குமுன் செல்லுகின்றன' என்று சீயோன் குமாரத்தியிடம் சொல்லுங்கள்' என்கிறார் கர்த்தர். ஏசா. 62:1

பெரிய வெள்ளிக்கிழமை. மனித குமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தமது ஜீவனைக் கொடுக்கவும் வந்தார். மா. 10:4

உயிர்த்தெழுந்த திருநாள். நம்முடைய ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் கடவுளும் பிதாவுமானவர் தோத்திரத்துக்குரியவர். இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே ஜீவனுள்ள நன்னம்பிக்கையுண்டாகும்படி, அவர் தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜனிப்பித்தார். 1 பே. 1:3,4

'முதலும் இறுதியுமானவர் நானே, ஜீவனுள்ளவரும் மரித்துப்போனவரும் நானே, இதோ, என்றென்றைக்கும் ஜீவனுள்ளவராயிருக்கிறேன். நானே மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களையுடையவர்.' வெளி. 1:17,18

விண்ணுக்கெழுதல். வானங்களை ஊடுருவிச் சென்ற தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறபடியினால், நாம் பண்ணியிருக்கிற அறிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருக்கக்கடவோம். ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், சமய சகாயம் அருளும் கிருபையைக் கண்டடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையில் சேரக்கடவோம். எபி. 4:14,16

பெந்தெகொஸ்தே எனும் தூய ஆவியின் திருநாள். நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினால் கடவுளின் அன்பு நமது இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறது. ரோ. 5:5

திரித்துவத் திருநாள். ஆ! கடவுளின் ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வளவு அதிகம்! அவர் நியாயத்தீர்ப்புகள் புத்திக்கு எட்டாதவைகள், அவர் வழிகள் ஆராய்ச்சிக்கு எட்டாதவைகள். சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்கென்றும் இருக்கிறது; என்றைக்கும் அவருக்கே மகிமை உண்டாவதாக. ஆமென். ரோ. 11:33,36

சகல புனிதர்களின் திருநாள். திரளான ஜனக்கூட்டத்தின் ஆரவாரம் போன்றதும், அநேகத் தண்ணீர்களின் இரைச்சல் போன்றதும், பலத்த இடிமுழக்கம் போன்றதுமான ஒரு சத்தம் கேட்டேன். 'அல்லேலூயா! சர்வ வல்ல கடவுளாகிய நம்முடைய கர்த்தர் இராஜ்யபாரம்பண்ணத் தொடங்கியிருக்கிறார்; நாம் சந்தோஷப்பட்டுக் களிகூரக்கடவோம்; அவருக்கு மகிமை செலுத்துவோம்.' வெளி. 19:6,7

புனிதர் திருநாள் (பொதுவானது). ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்துகொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மை எளிதில் அகப்படுத்துகிற பாவத்தையும் விலக்கி, விசுவாசக் கர்த்தாவும் விசுவாச சம்பூரணருமாகிய இயேசுவை நோக்கி, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடு ஓடக்கடவோம். அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, கடவுளுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார். எபி. 12:1,2

தென் இந்தியத் திருச்சபை நிறுவக நாள். இயேசு சொன்னார்: 'நீர் என்னை அனுப்பினீரென்றும், நீர் என்னில் அன்புகூர்ந்ததுபோல அவர்களிலும் அன்புகூர்ந்தீரென்றும் உலகம் அறிந்துகொள்ளும்படி, நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கத்தக்கதாக, நான் அவர்களிலும் நீர் என்னிலுமிருப்பதினால் அவர்கள் ஒன்றாகிப் பூரணப்படும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்.' யோ. **17:22,23**

புத்தாண்டுப் பிறப்பு நாள் அல்லது ஏதாவது ஆண்டுவிழா. கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்கள் புதுப் பலம் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளையடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள். ஏசா. **40:31**

அறுவடைப் பண்டிகை. பூமியும் அதன் நிறைவும், உலகமும் அதன் குடிகளும் கர்த்தருடையவை. சங். **24:1**

துன்ப காலம். கடவுள் நமக்கு அடைக்கலமும் பலமுமானவர்; ஆபத்துக் காலத்தில் அவரே உத்தமத் துணை. சங். **46:1**

தேசிய விழா. தேவரீர் புறஜாதியாரை நிதானமாய் நியாயந்தீர்த்து, பூமியிலுள்ள ஜனங்களை நடத்துவீர்; அதனால் ஜாதிகள் கெம்பீரித்து மகிழ்வார்களாக. சங். **67:4**

பின் அவர் சொல்லுவது:

ஆண்டவரே, எங்கள் உதடுகளைத் திறந்தருளும்:

அப்பொழுது எங்கள் வாய் உம்முடைய புகழை அறிவிக்கும்.

பிதாவுக்கும், குமாரனுக்கும், பரிசுத்த ஆவிக்கும் மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

---

* பின்வருவனவற்றில் ஒன்றைப் பாடலாம் அல்லது சொல்லவாம் அல்லது கடவுள் வாழ்த்துப் பாட்டைப் பாடலாம்.

(1)

திரியேகக் கடவுளைப் போற்றுதல்

ஆராதனை நடத்துபவர்: சேனைகளின் கடவுளாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்; வானமும் பூமியும் உமது மகிமையால் நிறைந்திருக்கின்றன. உன்னதத்திலே ஓசன்னா.

சபை: **கர்த்தரின் நாமத்தினாலே வந்தவரும், வருகிறவருமானவர் தோத்திரிக்கப்பட்டவர், உன்னதத்திலே ஓசன்னா.**

* உடுக்குறியிட்ட பகுதியை ஆராதனை நடத்துபவர் விரும்பினால் விட்டுவிடலாம்.

ஆ. ந.: கடவுளே, நீர் பரிசுத்தர்:

இடது பக்கத்திலிருப்பவர்கள்: கடவுளே, நீர் பரிசுத்தர்:

வலது பக்கத்திலிருப்பவர்கள்: கடவுளே, நீர் பரிசுத்தர்.

ஆ. ந.: சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்:

இடது: சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்:

வலது: சர்வ வல்லவரே, நீர் பரிசுத்தர்.

ஆ. ந.: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்:

இடது: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்:

வலது: சாவாமையுடையவரே, நீர் பரிசுத்தர்.

ஆ. ந.: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்:

இடது: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்:

வலது: ஆண்டவரே, எங்களுக்காகச் சிலுவையில் அறையுண்ட எங்கள் மீட்பரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

ஆ. ந.: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்:

இடது: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்:

வலது: பரிசுத்த ஆவியாகிய ஆண்டவரே, எங்கள்மேல் கிருபையாயிரும்.

ஆ. ந.: ஆண்டவரே, எங்கள் ஜெபங்களையும், ஆராதனையையும் ஏற்றுக்கொண்டு, எங்கள்மேல் கிருபையாயிரும்:

எல்லாரும்: ஆண்டவரே, எங்கள்மேல் மனதுருகி, எங்கள்மேல் கிருபையாயிரும்.

(2)

ஆராதனை நடத்துகிறவர் சொல்லலாம்:

எங்கள் தந்தையாம் கடவுளே, உமது வல்லமையாலும் ஞானத்தாலும் எல்லாவற்றையும் படைத்து, உமது குமாரனை எங்கள் இரட்சகராகத் தரும்படி உலகத்தில் அன்புகூர்ந்தீரே, உம்மைப் போற்றுகிறோம். குமாரனும் கடவுளே, பாவத்தைத் தவிர்த்து எல்லாவற்றிலும் எங்களைப்போல் மனிதன் ஆகி, எங்கள் பாவங்களுக்காக ஒப்புக்கொடுக்கப்பட்டு, எங்கள் நீதிக்காக உயிர்த்தெழும்பியவரே, உம்மைப் போற்றுகிறோம். பரிசுத்த ஆவியானவ

ராகிய கடவுளே, எல்லா உண்மைக்குள்ளும் எங்களை வழிநடத்தி கடவுளின் அன்பை எங்கள் நெஞ்சில் பொழிகிறவரே, உம்மை போற்றுகிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய கடவுளே உமக்கே எக்காலமும் எல்லாப் புகழும் மகிமையும் உண்டாவதாக ஆமென்.

பாவ அறிக்கை

ஆராதனை நடத்துகிறவர் கீழ்க்கண்ட திருவசனங்கள் போன்றவற்றைத் திருமறையிலிருந்து வாசிக்கலாம்:

நமக்குப் பாவமில்லை என்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாவோம், நமக்குள் உண்மை இல்லை. நமது பாவங்களை அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எவ்வித அநீதமும் நீங்க நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் நம்பத்தக்கவரும் நீதியும் உள்ளவர்.
1 யோ. 1:8,9

நான் எழுந்து, என் தகப்பனிடத்திற்குப்போய், 'தகப்பனே, பரத்துக்கு விரோதமாகவும் உமது பார்வையிலும் பாவஞ் செய்தேன். இனி உம்முடைய மகன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரனல்லன், உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும்' என்பேன்.
லூ. 15:18,19

கடவுள் இராஜ்யம் சமீபித்திருக்கிறது; மனந்திரும்பிச் சுவிசேஷத்தில் நம்பிக்கை வையுங்கள்.
மா. 1:15

நமது பலவீனங்களுக்காகப் பரிதபிக்க முடியாத பிரதான ஆசாரியர் நமக்கு இராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும் பாவமில்லாத பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார்.
எபி. 4:15

ஆ. ந.: நாம் முழங்காற்படியிட்டு மௌனமாக நம்மை நாமே சோதனை செய்வோம்.

எல்லாரும் முழங்காற்படியிட்டுச் சற்றுநேரம் அமைதியாயிருப்பார்கள். பின்பு:

ஆ. ந.: சர்வ வல்லமையுள்ள கடவுளிடத்தில் நாம் நமது பாவங்களைத் தாழ்மையோடு அறிக்கையிடுவோம்.

பின்வரும் பாவ அறிக்கை ஜெபங்களில் ஒன்றை யாவரும் சொல்லுவர்:

(1)

சர்வ வல்லமையும் மிகுந்த இரக்கமுமுள்ள பிதாவே, தப்பிப்போன ஆடுகளைப்போல நாங்கள் உம்முடைய வழிகளை விட்டு வழுவி அலைந்து போனோம். எங்கள் இருதயத்தின் யோசனைகளுக்கும் விருப்பங்

களுக்கும் மிகவும் இணங்கி நடந்தோம். உமது பரிசுத்த கற்பனைகளுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்தோம். செய்யத்தக்கவைகளைச் செய்யாமல், செய்யத்தகாதவைகளைச் செய்துவந்தோம்; எங்களுக்குச் சுகமேயில்லை. ஆனாலும் ஆண்டவரே, தேவரீர் எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாய், மனிதருக்கு அருளிச்செய்த வாக்குத்தத்தங் களின்படியே, நிர்ப்பாக்கியமுள்ள குற்றவாளிகளாகிய எங்களுக்கு இரங்கும். தப்பிதங்களை அறிக்கையிடுகிற எங்கள்மேல் பொறுமையா யிரும். பாவத்தினிமித்தம் துக்கப்படுகிற எங்களைச் சீர்ப்படுத்தும். மிகவும் இரக்கமுள்ள பிதாவே, உம்முடைய பரிசுத்த நாமத்துக்கு மகிமையுண்டாகும்படி நாங்கள் இனித் தேவ பக்தியும், நீதியும், தெளிந்த புத்தியும் உள்ளவர்களாய் நடந்துவர, இயேசுகிறிஸ்துவி னிமித்தம் எங்களுக்குக் கிருபை செய்தருளும். ஆமென்.

(2)

எங்கள் தந்தையாம் கடவுளே, நினைவினாலும் வார்த்தையினாலும் செய்கையினாலும் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்திருக்கிறோம். முழு மனதோடு நாங்கள் உம்மை நேசிக்கவில்லை; எங்களிடத்தில் நாங்கள் அன்புகூருவதுபோல அயலாரிடத்தில் நாங்கள் அன்பு கூரவில்லை. எங்கள்மேல் இரக்கமாயிருக்க உம்மை வேண்டிக் கொள்ளுகிறோம்; எங்கள் பாவ அழுக்கை நீக்கி எங்களைச் சுத்திகரியும்; எங்கள் குற்றங்களை விட்டுவிட எங்களுக்கு உதவிபுரியும். எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம் பிதாவே. ஆமென்.

ஆ. ந.: சர்வ வல்லமையும், மிகுந்த இரக்கமுமுள்ள ஆண்டவர் மன்னிப்பையும் பாவ நிவிர்த்தியையும் நமக்குக் கட்டளையிட்டருளி, வாழ்க்கையைச் சீர்ப்படுத்துவதற்கான காலத்தையும், தமது பரிசுத்தாவியின் கிருபையையும் தேற்றுதலையும் தந்தருளுவாராக. ஆமென்.

குரு. 'நமக்கு' என்பதற்குப் பதிலாக 'உங்களுக்கு' என்று கூறலாம்.

திருவசனப் போதனை

எல்லாரும் எழுந்து நிற்க:

ஆ. ந.: ஆண்டவரைத் துதியுங்கள்:*
சபை: ஆண்டவர் நாமம் துதிக்கப்படுவதாக.

---

* பின்வருவனவற்றில் ஒன்றைச் சொல்லலாம் அல்லது பாடலாம்:

(1)

சங்கீதம் 95

கர்த்தரைக் கெம்பீரமாகப் பாடி: நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம்பண்ணக்கடவோம் வாருங்கள்.

துதித்தலுடனே அவர் சன்னிதிக்கு முன்பாக வந்து: சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.

கர்த்தரே மகா தேவனும்: எல்லாத் தேவர்களுக்கும் மகா ராஜனுமாயிருக்கிறார்.

பூமியின் ஆழங்கள் அவர் கையில் இருக்கிறது: பர்வதங்களின் உயரங்களும் அவருடையவைகள்.

சமுத்திரம் அவருடையது, அவரே அதை உண்டாக்கினார்: வெட்டாந்தரையையும் அவருடைய கரம் உருவாக்கிற்று.

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக: நாம் பணிந்து குனிந்து முழங்கால்படியிடக்கடவோம் வாருங்கள்.

அவர் நம்முடைய தேவன்: நாம் அவர் மேய்ச்சலின் ஜனங்களும் அவர் கைக்குள்ளான ஆடுகளுமாமே.

[இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில்: வனாந்தரத்தில் கோபம் மூட்டினபோதும் சோதனை நாளிலும் நடந்ததுபோல உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்.

அங்கே உங்கள் பிதாக்கள் என்னைச் சோதித்து: என்னை பரீட்சை பார்த்து, என் கிரியையையும் கண்டார்கள்.

நாற்பது வருஷமாய் நான் அந்தச் சந்ததியை அரோசித்து அவர்கள் வழுவிப்போகிற இருதயமுள்ள ஜனமென்றும், என்னுடைய வழிகளை அறியாதவர்களென்றும் சொல்லி,

என்னுடைய இளைப்பாறுதலில் அவர்கள் பிரவேசிப்பதில்லையென்று: என்னுடைய கோபத்திலே ஆணையிட்டேன்.]

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக:

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

(2)

சங்கீதம் 100

மியின் குடிகளே, எல்லாரும் கர்த்தரைக் கெம்பீரமாய்ப்
டுங்கள்: மகிழ்ச்சியோடே கர்த்தருக்கு ஆராதனை செய்து,
னந்த சத்தத்தோடே அவர் சன்னிதிமுன் வாருங்கள்.

கர்த்தரே தேவனென்று அறியுங்கள்: நாம் அல்ல, அவரே நம்மை
ண்டாக்கினார்: நாம் அவருடைய ஜனங்களும், அவர் மேய்ச்சலின்
டுகளுமாய் இருக்கிறோம்.

அவர் வாசல்களில் துதியோடும் அவர் பிராகாரங்களில் புகழ்ச்சி
யாடும் பிரவேசித்து: அவரைத் துதித்து அவருடைய நாமத்தை
தாத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும்: அவ
டைய உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை
ண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்
ளிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

ந்த நாளுக்குரிய சங்கீதம் அல்லது சங்கீதங்கள், சொல்ல அல்லது பாடவேண்
ம் (ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு நாட்களிலும் வாசிக்கவேண்டிய சங்
தங்களைப் பார்க்கலாம்). சங்கீதங்களோ, பாடல்களோ பாட அல்லது சொல்லப்
டும்போது ஆராதனை நடத்துகிறவரும், ஜனங்களும் நிற்கலாம் அல்லது உட்
ார்ந்திருக்கலாம்.

முதலாம் பாடம்

தலாம் பாடம் பழைய ஏற்பாட்டிலிருந்தாவது, அப்போகிரிப்பா ஆகமத்திலிருந்
தாவது வாசிக்கப்படும்.

வருபவைகளில் ஒன்று பாடப்படும் அல்லது சொல்லப்படும்:

(1)

சகரியாவின் கீதம்

(லூ. 1:68–79)

ஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருக்கு: தோத்திரமுண்டாவ
ாக.

அவர் நம்முடைய பிதாக்களுக்கு: வாக்குத்தத்தம்பண்ணின
ிரக்கத்தைச் செய்வதற்கும்;

தம்முடைய பரிசுத்த உடன்படிக்கையை: நினைத்தருளி,

உங்கள் சத்துருக்களின் கைகளினின்று நீங்கள் விடுதலையாக்க பட்டு: உயிரோடிருக்கும் நாளெல்லாம் பயமில்லாமல் எனக் முன்பாகப் பரிசுத்தத்தோடும் நீதியோடும் எனக்கு ஊழிய செய்யக் கட்டளையிடுவேன் என்று,

அவர் நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமுக்கு: இட்ட ஆணை நிறைவேற்றுவதற்கும்;

ஆதி முதற்கொண்டிருந்த தம்முடைய பரிசுத்த தீர்க்கதரி களின் வாக்கினால்: தாம் சொன்னபடியே,

தமது ஜனத்தைச் சந்தித்து மீட்டுக்கொண்டு: நம்முடை சத்துருக்களினின்றும், நம்மைப் பகைக்கிற யாவருடைய கைகளி னின்றும் நம்மை இரட்சிக்கும்படிக்கு,

தம்முடைய தாசனாகிய தாவீதின் வம்சத்திலே: நமக் இரட்சணியக் கொம்பை ஏற்படுத்தினார்.

நீயோ பாலகனே, உன்னதமானவருடைய தீர்க்கதரிசி என்ன படுவாய்: நீ கர்த்தருக்கு வழிகளை ஆயத்தம்பண்ணவும்,

நமது தேவனுடைய உருக்கமான இரக்கத்தினாலே அவருடை ஜனத்துக்குப் பாவமன்னிப்பாகிய இரட்சிப்பைத் தெரியப்படுத் வும்: அவருக்கு முன்னாக நடந்துபோவாய்.

அந்தகாரத்திலும் மரண இருளிலும்: உட்கார்ந்திருக்கிறவ களுக்கு வெளிச்சம் தரவும்,

நம்முடைய கால்களைச் சமாதானத்தின் வழியிலே நடத்தவும் அவ்விரக்கத்தினாலே உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதய நம்மைச் சந்தித்திருக்கிறது.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகால களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

(2)

வாலிபர் மூவரின் கீதம்

[தானி. 3:23 (அப்போகிரிப்பா)]

கர்த்தர் சிருஷ்டித்த சகல சிருஷ்டிகளே, கர்த்தரைப் போற்றுங்கள்; கர்த்தரைப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

கர்த்தருடைய தூதர்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: கர்த்தரைப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

வானங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: ஆகாய விரிவின் மேலுள்ள ஜலங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்.

கர்த்தருடைய சகல வல்லமைகளே, கர்த்தரைப் போற்றுங்கள்: சூரிய சந்திரரே, கர்த்தரைப் போற்றுங்கள்.

வானத்தின் நட்சத்திரங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: மழையே, பனியே, கர்த்தரைப் போற்றுங்கள்.

தேவனுடைய காற்றுகளே, கர்த்தரைப் போற்றுங்கள்: அக்கினியே, உஷ்ணமே, கர்த்தரைப் போற்றுங்கள்.

மாரிகாலமே, கோடைகாலமே, கர்த்தரைப் போற்றுங்கள்: மூடுபனியே, ஆலங்கட்டியே, கர்த்தரைப் போற்றுங்கள்.

பனிக்கட்டியே, குளிரே, கர்த்தரைப் போற்றுங்கள்: உறைந்த நீரே, உறைந்த மழையே, கர்த்தரைப் போற்றுங்கள்.

இரவே, பகலே, கர்த்தரைப் போற்றுங்கள்: ஒளியே, இருளே, கர்த்தரைப் போற்றுங்கள்.

மின்னல்களே, மேகங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: கர்த்தரைப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரைத் துதியுங்கள்.

பூமியானது கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவது.

மலைகளே, குன்றுகளே, கர்த்தரைப் போற்றுங்கள்: பூமியில் முளைத்தெழும்பும் எல்லாத் தாவரங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்.

நீரூற்றுகளே, கர்த்தரைப் போற்றுங்கள்: சமுத்திரங்களே, நதிகளே, கர்த்தரைப் போற்றுங்கள்.

மகா மச்சங்களே, நீர்வாழும் சகல ஜெந்துக்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: ஆகாயத்துச் சகல பறவைகளே, கர்த்தரைப் போற்றுங்கள்.

காட்டு மிருகங்களே, நாட்டு மிருகங்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: மனுமக்களே, கர்த்தரைப் போற்றுங்கள்.

இஸ்ரவேலர் கர்த்தரைப் போற்றிப் புகழ்ந்து: என்றென்றைக்கும் அவரைத் துதிக்கக்கடவர்கள்.

கர்த்தருடைய ஆசாரியர்களே, கர்த்தரைப் போற்றுங்கள்: கர்த்தருடைய ஊழியக்காரரே, கர்த்தரைப் போற்றுங்கள்.

நீதிமான்களின் ஆவிகளே, ஆத்துமாக்களே, கர்த்தரை போற்றுங்கள்: பரிசுத்தமும் தாழ்மையுமுள்ள இருதயமுடை மனிதர்களே, கர்த்தரைப் போற்றுங்கள்.

அனனியாவே, அசரியாவே, மிகாவேலே, கர்த்தரை போற்றுங்கள்: கர்த்தரைப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரை துதியுங்கள்.

பிதாவையும், குமாரனையும், பரிசுத்த ஆவியையும் போற் வோம்: கர்த்தரைப் புகழ்ந்து என்றென்றைக்கும் அவரை துதிப்போம்.

பரலோகத்தின் ஆகாய விரிவிலுள்ளகடவுளே, நீர் துதிக்கப்பட தக்கவர்: என்றென்றைக்கும் எல்லாவற்றிற்கும் மேலாக துதிக்கப்படுவீராக.

(3)

கன்னிமரியாளின் கீதம்

(லூ. 1:46–55)

என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது: என் ஆவி எ இரட்சகராகிய தேவனில் களிகூருகிறது.

அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை: நோக்கிப் பார் தார்.

இதோ, இதுமுதல் எல்லாச் சந்ததிகளும்: என்னைப் பாக்கியவ என்பார்கள்.

வல்லமையுடையவர் மகிமையானவைகளை எனக்குச் செய்தார் அவருடைய நாமம் பரிசுத்தமுள்ளது.

அவருடைய இரக்கம் அவருக்குப் பயந்திருக்கிறவர்களுக்கு: தலை முறை தலைமுறைக்குமுள்ளது.

தம்முடைய புயத்தினாலே பராக்கிரமஞ் செய்தார்: இருத சிந்தையில் அகந்தையுள்ளவர்களைச் சிதறடித்தார்.

பலவான்களை ஆசனங்களிலிருந்து தள்ளி: தாழ்மையானவர்களை உயர்த்தினார்:

பசியுள்ளவர்களை நன்மைகளினால் நிரப்பி: ஐசுவரியமுள்ளவர்களை வெறுமையாய் அனுப்பிவிட்டார்.

நம்முடைய பிதாக்களுக்கு அவர் சொன்னபடியே, ஆபிரகா முக்கும் அவன் சந்ததிக்கும் என்றென்றைக்கும் இரக்கஞ்செய் நினைத்து: தம்முடைய தாசனாகிய இஸ்ரவேலை ஆதரித்தார்.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

இரண்டாம் பாடம்

இரண்டாம் பாடம் புதிய ஏற்பாட்டிலிருந்து வாசிக்கப்படும் அல்லது இரண்டு பாடங்கள் வாசித்தால், ஒன்று நிருபங்களிலிருந்தும் அல்லது இதரப் புத்தகங்களிலிருந்தும், மற்றொன்று சுவிசேஷங்களிலிருந்தும் வாசிக்கலாம்.

பின்வருவனவற்றில் ஒன்றைச் சொல்லலாம் அல்லது பாடலாம்.

(1)

திருச்சபையின் கீதம்

தேவனே, உம்மைத் துதிக்கிறோம்: உம்மைக் கர்த்தரென்று பிரஸ்தாபப்படுத்துகிறோம்.

நித்திய பிதாவாகிய உம்மை: பூமண்டலமெல்லாம் வணங்கும்.

தேவதூதர் அனைவோரும், பரமண்டலங்களும், அவைகளிலுள்ள அதிகாரங்கள் அனைத்தும்;

கேருபின்களும் சேராபின்களும்: தேவரீரை ஓயாமல் புகழ்ந்து போற்றி,

சேனைகளின் தேவனாகிய கர்த்தரே, நீர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்: வானமும் பூமியும் உமது மகிமையுள்ள மகத்துவத்தால் நிறைந்தன என்று முழங்குகிறார்கள்.

அப்போஸ்தலராகிய மாட்சிமை பொருந்திய கூட்டம் உம்மைப் போற்றும்: தீர்க்கதரிசிகளாகிய சிறப்புள்ள சங்கம் உம்மைப் போற்றும்.

இரத்தச்சாட்சிகளாகிய தைரிய சேனை உம்மைப் போற்றும்.

அளவில்லாத மகத்துவமுள்ள பிதாவாகிய தேவரீரையும், வணங்கப்படத்தக்க மெய்யான உம்முடைய ஒரே குமாரனையும்: தேற்றரவாளனான பரிசுத்த ஆவியையும்,

உலகமெங்குமுள்ள பரிசுத்த சபை: பிரஸ்தாபப்படுத்தும்.

கிறிஸ்துவே, தேவரீர் மகிமையின் ராஜா: நீரே பிதாவினுடைய நித்திய சுதன்,

நீர் மனிதரை இரட்சிக்க ஏற்பட்டபொழுது: கன்னியாஸ்திரீயின் கர்ப்பத்தை அருவருக்கவில்லை.

நீர் மரணத்தின் கொடுமையை வென்று: விசுவாசிகள் எல்லாரு க்கும் மோட்ச இராஜ்யத்தைத் திறந்தீர்.

நீர் பிதாவின் மகிமையிலே: தேவனுடைய வலதுபாரிசத்தி வீற்றிருக்கிறீர்.

நீர் எங்களுக்கு நியாயாதிபதியாக: வருவீரென்று விசுவாசி கிறோம்.

உமது விலேயுயர்ந்த இரத்தத்தால் மீட்டுக்கொண்ட உமது அடி யாருக்குச் சகாயஞ்செய்ய உம்மை வேண்டிக்கொள்ளுகிறோம் எங்களே நித்திய மகிமையிலே உம்முடைய பரிசுத்தவான்களோடே சேர்த்துக்கொள்ளும்.

கர்த்தாவே, உமது ஜனத்தை இரட்சித்து உமது சுதந்தரத்தை ஆசீர்வதியும்: அவர்களே ஆண்டுகொண்டு என்றென்றைக்கும் உயர்த்தியருளும்.

தினம் தினம் உம்மைத் தோத்திரிக்கிறோம்: எப்பொழுதும் சதாகாலங்களிலும் உமது நாமத்தை வணங்குகிறோம்.

ஆண்டவரே, இந்நாளில் பாவஞ்செய்யாதபடி எங்களேக் காத் தருளும்: கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும், எங்களுக்கு இரங்கும்.

கர்த்தாவே, நாங்கள் உம்மை நம்பியிருக்கிறதால், உமது கிருபை எங்கள்மேல் இருப்பதாக: கர்த்தாவே, உம்மையே நம்பியிருக் கிறேன், நான் ஒருக்காலும் கலங்காதபடி செய்யும்.

(2)

சிமியோனின் கீதம்

(லூா. 2:29–32)

ஆண்டவரே, உமது வார்த்தையின்படி: உமது அடியேனே இப் பொழுது சமாதானத்தோடே போகவிடுகிறீர்.

புறஜாதிகளுக்குப் பிரகாசிக்கிற ஒளியாகவும்: உமது ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும்,

தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக: ஆயத்தம்பண்ணின உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டன.

பிதாவுக்கும் குமாரனுக்கும் பரிசுத்த ஆவிக்கும்: மகிமை உண்டாவதாக;

ஆதியிலும் இப்பொழுதும் எப்பொழுதுமான: சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

அருளுரையும் விசுவாசப்பிரமாணமும்

இங்கே அருளுரை ஆற்றலாம்.

எல்லாரும் எழுந்து, அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தைச் சொல்லவேண்டும் அல்லது பாடவேண்டும்.

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனுகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவையும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினுலே கன்னிமரியாளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார்; பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினுர்; மூன்றும் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினுர்; பரமண்டலத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதாவாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறுர்; அவ்விடத்திலிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீரம் உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

ஜெபங்கள்

கர்த்தர் உங்களோடிருப்பாராக:
அவர் உமது ஆவியோடும் இருப்பாராக.

ஜெபம் செய்வோம்

கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்:
கிறிஸ்துவே, எங்களுக்கு இரங்கும்.
கர்த்தாவே, எங்களுக்கு இரங்கும்:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ் செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னி

யும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணுமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

---

* ஆராதனை நடத்துகிறவரும், ஜனங்களும் பின்வரும் வாக்கியங்களையும், மறுமொழிகளையும் சொல்லலாம் அல்லது பாடலாம்:

ஆண்டவரே, உமது இரக்கத்தை எங்களுக்குக் காண்பியும்:
உம்முடைய இரட்சிப்பை எங்களுக்கு அருளிச்செய்யும்.
ஆண்டவரே, எங்களை ஆளுபவர்களை வழிநடத்தும்:
அவர்களுக்குப் பரத்திலிருந்து வரும் ஞானத்தைக் கொடுத்தருளும்.
உம்முடைய பணிவிடைக்காரருக்கு நீதியைத் தரிப்பியும்:
நீர் தெரிந்துகொண்ட ஜனத்தைச் சந்தோஷப்படுத்தும்.
ஆண்டவரே, உமது ஜனத்தை இரட்சியும்:
உம்முடைய சுதந்தரத்தை ஆசீர்வதியும்.
ஆண்டவரே, எங்கள் காலத்தில் சமாதானத்தைத் தந்தருளும்:
தேவரீரேயல்லாமல் உலகத்தை ஆளுபவர் வேறு ஒருவருமில்லை.
கடவுளே, எங்கள் இருதயங்களைச் சுத்திகரியும்:
உம்முடைய பரிசுத்த ஆவியை எங்களிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளாதேயும்.

ஆராதனை நடத்துகிறவர் அந்தந்த நாளுக்குரிய சுருக்க ஜெபத்தை அல்லது சுருக்க ஜெபங்களை ஏறெடுத்தபின், பின்வருவனவற்றில் ஒன்றைச் சொல்லுவார்:

சமாதானத்துக்காக ஜெபம்

(1)

சமாதானத்துக்குக் காரணரும் ஏக சிந்தையை விரும்புகிறவருமாகிய கடவுளே, உம்மை அறிவதே நித்திய ஜீவன்; உம்மைச் சேவிப்பதே மெய்ச் சுயாதீனம்: தேவரீரைத் தஞ்சமாகக்கொண்டிருக்கிற உமது அடியாராகிய நாங்கள், எந்த விரோதிகளுடைய வல்லமைக்கும் பயப்படாதிருக்கும்படியாக, எங்கள் சத்துருக்கள் செய்கிற எல்லாப் பிரயத்தனங்களினின்று, எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினுல் எங்களைக் காப்பாற்றியருளும். ஆமென்.

(2)

சகல பரிசுத்த விருப்பங்களுக்கும், சகல நல்லாலோசனைகளுக்கும், சகல நீதியான கிரியைகளுக்கும் காரணராகிய கடவுளே, உலகம் தரக்கூடாத சமாதானத்தை உமது அடியாராகிய எங்களுக்குத் தந்தருளும். நாங்கள் உமது கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடக்க மன உற்சாகமுள்ளவர்களாயிருந்து, சத்துருக்கள் பயமில்லாமல் உம்மாலே காக்கப்பட்டு, ஆறுதலோடும் அமைதலோடும் எங்கள் ஜீவ காலத்தைப் போக்குவதற்கு, எங்கள் இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் புண்ணியங்களினிமித்தம் கிருபை செய்தருளும். ஆமென்.

காலை ஆராதனையில் பின்வருவனவற்றில் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கவும்:

தேவ கிருபைக்காக ஜெபம்

(1)

சர்வ வல்லமையுள்ள நித்திய கடவுளே, இந்நாள் வரையும் எங்களைச் சுகமாய் நடத்தி வந்த எங்கள் பரம பிதாவாகிய ஆண்டவரே, இந்நாளிலும் உமது மிகுந்த வல்லமையால் எங்களைக் காப்பாற்றி, நாங்கள் யாதொரு பாவத்துக்கு உட்படாமலும், எவ்விதமான மோசத்திலும் அகப்படாமலும், உமது பார்வைக்கு நீதியாயிருக்கிறதை எப்பொழுதும் செய்கிறதற்கு, நாங்கள் செய்கிற எல்லாவற்றையும் உம்முடைய ஆளுகையினாலே நடத்தியருளவேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

(2)

எல்லாம் வல்ல ஆண்டவரே, நித்திய பிதாவே, உமது பிரமாணங்களின் வழிகளிலும், உமது கற்பனைகளுக்கிசைந்த செயல்களிலும் ஈடுபட எங்கள் உடலையும் வாழ்க்கையையும் வழிநடத்தி, தூய்மைப்படுத்தி, ஆளுகை செய்யும். இவ்வாறாக, இங்கும், எப்பொழுதும், எங்கள் உடலும் உள்ளமும் உமது வல்லமையால் பாதுகாக்கப்படச் செய்யும். எங்கள் ஆண்டவரும் இரட்சகருமான இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

(3)

எல்லா அதிகாரமும் வல்லமையுமுடைய ஆண்டவரே, நீர்தாமே எல்லா நன்மைகளுக்கும் காரணர். உமது திருநாமத்தை நேசிக்

கும் அன்பை எங்கள் நெஞ்சத்தில் பொருத்தி, மெய்த் தேவ பக்தியை எங்களுக்குள்ளே வளரப்பண்ணி, சகல நன்மையிலும் எங்களை ஆதரித்து, உமது மிகுந்த இரக்கத்தினாலே இவைகளில் எங்களை நிலைநிறுத்தவேண்டுமென்று, எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின்மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

மாலை ஆராதனையில் பின்வருவனவற்றில் ஒரு ஜெபத்தை ஏறெடுக்கவும்:

எல்லா மோசங்களுக்கும் விலக்கிக் காப்பதற்கான ஜெபம்

(1)

ஆண்டவரே, எங்கள் அந்தகாரம் நீங்க வெளிச்சம் தந்து, இந்த இராவில் நேரிடும் சகல மோசங்களுக்கும் விக்கினங்களுக்கும், உமது மிகுந்த இரக்கத்தினால் எங்களை விலக்கிக் காக்கவேண்டுமென்று, உம்முடைய ஒரே குமாரனும் எங்கள் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் அன்பினிமித்தம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

(2)

இரக்கமுள்ள ஆண்டவரே, பிரசன்னமாயிரும். இராப்பொழுதில் எங்களைப் பாதுகாரும். விரைந்தோடும் உலகின் மாறுதலாலும், எதிர்பாரா நிகழ்ச்சிகளாலும் பாதிக்கப்படும் எங்களை உமது நித்திய மாறாத நிலையில் தங்கச் செய்தருளுமாறு எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஒரு பாட்டுப் பாடலாம்.

இவ்விடத்தில் குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ற ஜெபங்களையும், தோத்திர ஜெபங்களையும் ஏறெடுக்கவும். அவைகளைச் சொந்தச் சொற்களில் அமைத்தும் ஏறெடுக்கலாம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்கும் அதன் அதிகாரிகளுக்குமான ஜெபம் ஒன்று இருத்தல் வேண்டும். உதாரணமாக, திருவிருந்து ஆராதனையிலுள்ள ஒரு லித்தானியாவைச் சொல்லலாம் அல்லது பாட்டாக ஏறெடுக்கலாம்.

---

* தோத்திர ஜெபங்களில் பொதுவான தோத்திர ஜெபம் இடம்பெறலாம்:

சர்வ வல்லமையுள்ள கடவுளே, சர்வ ஜீவ தயாபர பிதாவே, அபாத்திரரான உமது அடியாராகிய எங்களுக்கும் மற்றெல்லா மனிதருக்கும், தேவரீர் அருளிச்செய்த பற்பல கிருபைக்காகவும், அன்புள்ள தயவுக்காகவும், நாங்கள் மிகுந்த தாழ்மையோடும் முழு இருதயத்தோடும் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். தேவரீர் எங்களைச் சிருஷ்டித்ததற்காகவும், காப்பாற்றுகிறதற்காகவும், இம்மைக்குரிய எல்லா ஆசிர்வாதங்களுக்காகவும், உம்மைத் துதிக்கிறோம்; விசேஷமாய் எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவினாலே உலகத்தை மீட்டுக்கொண்ட விலைமதியாத

உமது அன்புக்காகவும், கிருபையின் யத்தனங்களுக்காகவும், மகிமை யடைவோம் என்கிற நம்பிக்கைக்காகவும் உமக்குத் தோத்திரம் செலுத்துகிறோம். நாங்கள் உண்மையாய் நன்றியறிந்த இருதய முள்ளவர்களாயிருக்கவும், எங்களை உமது ஊழியத்துக்கு ஒப்புக் கொடுத்து, எங்கள் வாழ்நாளெல்லாம் உமக்கு முன்பாகப் பரிசுத்தமும், நீதியுமுள்ளவர்களாய் நடக்கவும், எங்கள் வாக்கினாலே மாத்திரமல்ல, எங்கள் நடக்கையினாலேயும் உம்முடைய புகழைப் பிரஸ்தாபப்படுத்த வும், தேவரீர் செய்த உபகாரங்களெல்லாவற்றையும் உணர்ந்து கொள்ளும் உணர்வை எங்களுக்கு அருளிச்செய்ய வேண்டுமென்று, எங்கள் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். அவருக்கும் தேவரீருக்கும் பரிசுத்த ஆவிக்கும் எல்லா மேன்மையும் மகிமையும் சதாகாலங்களிலும் உண்டாவதாக. ஆமென்.

---

* பின்வருவனவற்றில் ஒன்றை முடிவாக ஏறெடுக்கலாம்:

(1)

இத்தருணத்தில் ஒருமனப்பட்டு உம்மை நோக்கி எங்கள் பொது வான விண்ணப்பங்களைச் செய்ய எங்களுக்குக் கிருபை அளித்த சர்வ வல்லமையுள்ள கடவுளே, இரண்டு பேராவது மூன்று பேராவது என் நாமத்தினாலே கூடிவரும்பொழுது, அவர்கள் கேட்கிறவைகளை அருளிச் செய்வேன் என்று வாக்கருளியிருக்கிறீரே. கர்த்தாவே, உமது அடியாராகிய எங்களுக்கு வேண்டிய நன்மைகள் உண்டாக, எங்கள் விருப்பங்களையும் வேண்டுதல்களையும் இப் பொழுது நிறைவேற்றி, இம்மையிலே உம்முடைய சத்தியத்தை அறிகிற அறிவையும், மறுமையிலே நித்திய ஜீவனையும் எங்களுக்குக் கட்டளையிட்டருளும். ஆமென்.

(2)

ஆண்டவரே, உமது ஜனம் உம்மை நோக்கி ஏறெடுக்கும் விண்ணப்பங்களைத் தயவாய் ஏற்றுக்கொள்ளும். அவர்கள் எவற்றைச் செய்யவேண்டும் என்பதை உணர்ந்து அறியச் செய்யும், அவற்றைச் செய்வதற்கு வேண்டிய உமது அருளையும் வல்லமையை யும் கட்டளையிட்டருளும். எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து வின் மூலமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். ஆமென்.

அறிவிப்புக்களை இங்கு கூறலாம். ஒரு பாட்டைப் பாடலாம்.

காணிக்கைப் படைப்பு இருந்தால், இங்கே அவைகளைப் படைக்கலாம் அல்லது ஆரா தனைக்கு முன்பே அவைகளைச் சேகரிக்கலாம். காணிக்கையைக் குரு வாங்கி, மக்களின் சார்பில் ஜெபஞ்செய்து அதைக் கடவுளுக்குப் படைக்கவேண்டும். இறுதியாகப் பின்வருவனவற்றில் ஓர் ஆசீர்வாதம் கூறிச் சபையை அனுப்பி வைக்க வேண்டும்:

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியின் ஐக்கியமும் உங்களனைவரோடும் இருப்பதாக. ஆமென்.

தேவனுடைய இரக்கமுள்ள கிருபைக்கும் பராமரிப்புக்கும் உங்களை ஒப்புவிக்கிறோம். பிதா, குமாரன், பரிசுத்த ஆவியுமாகிய சர்வ வல்லமை பொருந்திய கடவுளுடைய ஆசீர்வாதம் உங்களுக்குள்ளே இருந்து, எப்பொழுதும் உங்களோடே நிலைத்திருக்கக்கடவது. ஆமென்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதித்து உங்களைக் காக்கக்கடவர். ஆண்டவர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரகாசிக்கப்பண்ணி உங்கள்மேல் கிருபையாயிருக்கக்கடவர். ஆண்டவர் தம்முடைய முகத்தை உங்கள்மேல் பிரசன்னமாக்கி, இப்பொழுதும் எப்பொழுதும் உங்களுக்குச் சமாதானம் கட்டளையிடக்கடவர். ஆமென்.

குரு 'உங்கள்மேல்' என்பதற்குப் பதிலாக 'நம்மேல்' என்று கூறலாம்.

அல்லது பின்வருவனவற்றில் ஒன்றைப் பயன்படுத்தலாம்:

நம்மையும் உலகமனைத்தையும் படைத்த பிதாவாகிய கடவுளுக்கும்; நம்மையும் எல்லா மக்களையும் மீட்ட குமாரனாகிய கடவுளுக்கும்; நம்மையும் தெரிந்தெடுக்கப்பட்ட எல்லாக் கடவுள் மக்களையும் பரிசுத்தப்படுத்தும் பரிசுத்த ஆவியாகிய கடவுளுக்கும் எப்பொழுதும் மகிமை உண்டாவதாக. ஆமென்.

நமக்குள் கிரியை செய்கிற தம்முடைய வல்லமையின்படியே, நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய்ச் செய்ய வல்லவருக்கு, திருச்சபையில் கிறிஸ்து இயேசுவுக்குள் தலைமுறை தலைமுறையாக என்றென்றைக்கும் மகிமை உண்டாவதாக. ஆமென்.
எபே. 3:20,21

மூன்றும் ஆராதனை முறை

போற்றுதல்

ல்லாரும் எழுந்து நிற்க, ஆராதனை நடத்துபவர்:

கடவுளைத் தொழுவோம்.

ரு பாட்டு.

ராதனை நடத்துபவரும் சபையாரும் மாறி மாறி வாசிக்கவேண்டிய வாசகம்:

(1)

கர்த்தரின் வாசல்களில் நன்றியறிதலோடும், அவர் பிராகாரங் களில் துதியோடும் பிரவேசியுங்கள்; அவருக்கு நன்றி செலுத்தி, அவர் நாமத்தைத் தோத்திரியுங்கள்.

கர்த்தர் நல்லவர். அவர் கிருபை என்றென்றும், அவர் உண்மை தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது. *சங். 100:4,5*

நம்மை உண்டாக்கின கர்த்தருக்கு முன்பாக நாம் பணிந்து குனிந்து முழங்காற்படியிடக்கடவோம், வாருங்கள்.

அவர் நம்முடைய கடவுள், நாம் அவர் மேய்ச்சலின் ஜனமும், அவர் கைக்குள்ளான ஆடுகளுமாம். *சங். 95:6,7*

கர்த்தருடைய பர்வதத்தில் ஏறுபவன் யார்? அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் நிற்பவன் யார்?

சுத்தமுள்ள கைகளும் மாசற்ற இருதயமும் உடையவனும், வீணானதைப் பற்றிக்கொள்ளாமலும், கபடாய் ஆணையிடாமலும் இருக்கிறவனே. *சங். 24:3,4*

நமது கடவுளாகிய ஆண்டவருக்கோ மிகுந்த இரக்கமும் மன்னிப்பும் உரியது; நாம் அவருக்கு விரோதமாய்த் துரோகஞ் செய்தோம். நமது கடவுளாகிய கர்த்தரின் சொல்லுக்குச் செவி கொடாமற்போனோம், தமது ஊழியராகிய தீர்க்கதரிசிகளைக் கொண்டு அவர் நமக்கு முன்பாக வைத்த அவருடைய பிரமாணங் களின்படி நாம் நடக்கவில்லை. *தானி. 9:9,10*

கடவுளுக்கேற்கும் பலிகள் நைந்த ஆவிதான்; கடவுளே, நைந்ததும் நொறுங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர். *சங். 51:17*

வருந்தியுழைத்துப் பாரம் சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரு என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறு தருவேன்.

மத். 11:

நான் எழுந்து என் தகப்பனிடத்திற்குப்போய்: 'தகப்பனே, பரத்து விரோதமாகவும் உமது பார்வையிலும் பாவஞ்செய்தேன்' என்பே

லூ. 15:

எல்லாரும் சேர்ந்து:

என் கன்மலையும் என் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயி வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தி பிரீதியாயிருப்பதாக.

சங். 19:

அல்லது (2)

கர்த்தர் தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லா அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக்கடவது. ஆப. 2:

மகிமையும் மகத்துவமும் அவர் சமுகத்தில் உண்டு; வல்லமைய தேஜசும் அவர் பரிசுத்த ஸ்தலத்தில் உண்டு. சங். 96

நான் உமது மிகுந்த கிருபையினால் உமது ஆலயஞ்சென்று,

உமது சந்நிதிக்கு நேராய்ப் பயபக்தியோடு பணிவேன். சங். 5

கர்த்தர் என் வெளிச்சம், என் இரட்சிப்பு; யாருக்கு பயப்படுவேன்?

கர்த்தர் என் ஜீவனுக்கு அரணானவர்; யாருக்கு அஞ்சுவேன்

சங். 27

நமது பாவங்களுக்குத் தக்கபடி அவர் நமக்குச் செய்யவில்ல நமது அக்கிரமங்களுக்குத் தக்கபடி அவர் நமக்குச் சரிக்கட்ட மில்லை.

பூமிக்கு வானம் எவ்வளவு உயரமோ, அவருக்குப் பயப்படுகிறவர்க மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிது. சங். 103:10,

கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும் அவருக் என்னத்தைச் செலுத்துவேன்?

இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக்கொண்டு கர்த்தரின் நாமத்தை தொழுதுகொள்ளுவேன்.

சங். 116:12,

எல்லாரும் சேர்ந்து:

என் கன்மலையும் மீட்பருமாகிய கர்த்தாவே, என் வாயின் வார்த்தைகளும் என் இருதயத்தின் தியானமும் உமது சமுகத்தில் பிரீதியாயிருப்பதாக.

சங். 19:14

அல்லது (3)

ஆராதனை நடத்துபவர் திருமறையிலிருந்து இரண்டாம் ஆராதனை முறையில் காணப்படும் திருவசனங்களைப் போன்றவற்றை வாசிக்கவேண்டும்.

ஆராதனை நடத்துபவர்:

ஜெபம் செய்வோம்

ஆராதனை நடத்துபவர் தமது சொந்த வார்த்தைகளில் ஜெபம் செய்வார் அல்லது பின்வரும் ஜெபத்தை ஏறெடுப்பார்:

(1)

சர்வ வல்லமையுள்ள கடவுளே, நாங்கள் எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் உமது சமுகத்தில் எங்கள் வணக்கத்தையும் தோத்திரத்தையும் செலுத்த வந்திருக்கிறோம். எங்கள் பாவங்களை உண்மையாய் அறிக்கை செய்யவும், மற்றவர்களுக்காகவும் எங்களுக்காகவும் ஜெபிக்கவும் உதவிசெய்தருளும். உமது திருவசனத்தை நாங்கள் கேட்கும்போது உமது அன்பின் மகத்துவத்தை அதிக உண்மையாய் அறிந்துகொள்ளவும், உமது கிருபையின் கனிகளை எங்கள் வாழ்க்கையில் காட்டவும் அருள்புரிய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

அல்லது (2)

எங்கள் பரம பிதாவாகிய சர்வ வல்லமையுள்ள கடவுளே, உம்மில் தான் எங்கள் நெஞ்சம் இளைப்பாறுதலும் சமாதானமும் பெறும். உம்மைத் தொழும் இந்நேரத்தில் உம்மை நீர் வெளிப்படுத்த உம்மைக் கெஞ்சுகிறோம். உமது ஆவிக்குரிய வரங்களை எங்களுக்குத் தாரும். அமைதியான இத்தூய நேரம் எங்களுக்குப் பரலோகக் காரியங்களில் பலனுண்டாக்கச் செய்யும். நீர் செய்யத்தந்துள்ள வேலையை நாங்கள் செய்துமுடிக்க எங்களைப் புதுப்பித்துப் பலப்படுத்தும். எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின்மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

பாவ அறிக்கை

ஆராதனை நடத்துபவர் திருமறையிலிருந்து இரண்டாம் ஆராதனை முறையில் காணப்படும் திருவசனங்களைப் போன்றவற்றை வாசிக்கலாம்.

ஆராதனை நடத்துபவர்:

நாம் அமைதியாயிருந்து நமது பாவங்களை அறிக்கை செய்வோம்.

எல்லாரும் சற்றுநேரம் அமைதியாயிருப்பர். அதன்பின் எல்லாரும் சேர்ந்து சொல்ல வேண்டியது:

(1)

கடவுளே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும்; உமது இரக்கங்களின் பெருக்கத்துக்குத் தக்கபடியே என் மீறுதல்களை அழித்துவிடும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவியருளும்; என் பாவம் நீங்க என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் உணருகிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன் நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோதமாக நான் பாவஞ்செய்து, உமது பார்வையில் தீமையானதை நடப்பித்தேன். கடவுளே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும்; நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும். உமது இரட்சணிய சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தாரும்; உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். *சங். 51:1–4,10,1*

அல்லது (2)

நாங்கள் நினைவிலும், சொல்லிலும், செயலிலும் பெரும் குற்றமாகப் பாவஞ் செய்திருக்கிறோம் என்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியாகிய சர்வ வல்லமையுள்ள கடவுளிடம் அறிக்கையிடுகிறோம். ஆதலால், எங்களுக்கு இரங்கவேண்டுமென்று கடவுளை மன்றாடுகிறோம். சர்வ வல்லமையுள்ள கடவுளே, எங்களுக்கு இரங்கி, எல்லாப் பாவங்களையும் எங்களுக்கு மன்னியும். நன்மையானவற்றில் எங்களை உறுதிப்படுத்தி, நிலைப்படுத்தி நித்திய ஜீவனை அடையச் செய்யும். எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆராதனை நடத்துபவர் தமது சொந்த வார்த்தைகளில் பாவமன்னிப்புக்கான ஒரு ஜெபத்தைச் சொல்லுவார் அல்லது பின்வரும் ஜெபத்தைச் சொல்லலாம்:

(1)

இரக்கமுள்ள ஆண்டவரே, உம்மிடத்தில் விசுவாசமாயிருக்கி ஜனமாகிய நாங்கள் சகல பாவங்களும் அறச் சுத்திகரிக்கப்படு

ற்கும், அமைதலான மனத்தோடே உமக்கு ஊழியம் செய்வ
ற்கும், எங்களுக்குப் பாவமன்னிப்பையும் சமாதானத்தையும்
ருளிச்செய்ய வேண்டுமென்று, எங்கள் கர்த்தராகிய இயேசு
றிஸ்துவின் மூலமாய் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

அல்லது (2)

தேவனே, எப்பொழுதும் இரக்கஞ் செய்கிறதும் மன்னிக்கிறதும் மக்குச் சுபாவமும் இலட்சணமுமாயிருக்கிறதினால், எங்கள் தாழ்மையான விண்ணப்பங்களை ஏற்றுக்கொண்டு, எங்கள் பாவங்க ளாகிய சங்கிலியினாலே நாங்கள் கட்டுண்டவர்களாயினும், உருக்க மான உமது மிகுந்த இரக்கத்தினாலே, எங்களைக் கட்டவிழ்த்து விடுதலையாக்க வேண்டுமென்று, எங்கள் மத்தியஸ்தரும் எங்களுக் காகப் பரிந்து பேசுகிறவருமாகிய இயேசுகிறிஸ்துவுக்கு மகிமை டண்டாக வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

எல்லாரும் சேர்ந்து இரண்டாம் ஆராதனை முறையில் காண்கிற பொதுவான தோத்திர ஜெபம் சொல்லலாம் அல்லது ஆராதனை நடத்துபவர் வேறொரு தோத்திர ஜெபத்தைச் செய்யலாம்.

திருவசனப் போதனை

ஒரு பாட்டுப் பாடலாம்.

பழைய ஏற்பாடு அல்லது அப்போகிரிப்பா ஆகமத்திலிருந்து முதற் பாடம் வாசித்தல்.

அந்நாளுக்குரிய சங்கீதம் அல்லது சங்கீதங்களைச் சொல்லவேண்டும் அல்லது பாடவேண்டும்.

புதிய ஏற்பாட்டுப் பாடம் வாசித்தல்.

இரண்டாம் ஆராதனை முறையிலிருந்து ஒரு பாடல் அல்லது வேறொரு பாட்டுப் பாடலாம்.

ர் அருளுரை (அல்லது பிள்ளைகளுக்கென ஒரு சிறப்பு அருளுரை) ஆற்றலாம்.

அப்போஸ்தலர் விசுவாசப்பிரமாணத்தை எழுந்து நின்று சொல்லலாம்:

வானத்தையும் பூமியையும் படைத்த சர்வ வல்லமையுள்ள பிதா வாகிய தேவனை விசுவாசிக்கிறேன்.

அவருடைய ஒரே குமாரனாகிய நம்முடைய நாதர் இயேசுகிறிஸ்துவை யும் விசுவாசிக்கிறேன். அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியா ளிடத்தில் உற்பவித்துப் பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் காலத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையுண்டு, மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, பாதாளத்தில் இறங்கினார். மூன்றும் நாள் மரித்தோரிடத்திலிருந்து எழுந்தருளினார். பரமண்டலத்துக்கேறி சர்வ வல்லமையுள்ள பிதா வாகிய தேவனுடைய வலதுபாரிசத்திலே வீற்றிருக்கிறார்; அவ்விடத்தி லிருந்து உயிருள்ளோரையும் மரித்தோரையும் நியாயந்தீர்க்க வருவார்.

பரிசுத்த ஆவியையும் விசுவாசிக்கிறேன். பொதுவாயிருக்கிற பரிசுத்த சபையும், பரிசுத்தவான்களுடைய ஐக்கியமும், பாவமன்னிப்பும், சரீர உயிர்த்தெழுதலும், நித்திய ஜீவனும் உண்டென்று விசுவாசிக்கிறேன். ஆமென்.

ஜெபங்கள்

திருச்சபைக்காகவும் உலகத்துக்காகவும் விண்ணப்பங்களையும், தோத்திர ஜெபங்களையும் ஏறெடுக்கவேண்டும். பின், எல்லாரும் சேர்ந்து சொல்லுவது:

பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜ்யம் வருவதாக. உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோல, பூமியிலேயும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள எங்கள் அப்பத்தை எங்களுக்கு இன்று தாரும். எங்களுக்கு விரோதமாய்க் குற்றஞ்செய்கிறவர்களுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல, எங்கள் குற்றங்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குள் பிரவேசிக்கப்பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும். இராஜ்யமும் வல்லமையும் மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே. ஆமென்.

ஒரு பாட்டுப் பாடவும்.

பாடங்கள் வாசித்தபின் அருளுரை ஆற்றுவிடில் இங்கு அதைச் செய்யலாம்.

ஒரு பாட்டுப் பாடவும். பாடும் நேரத்தில் அல்லது உடனடியாக, காணிக்கை சேகரிக்கப்படும்.

ஆராதனை நடத்துபவர் சொந்த வார்த்தைகளில் ஜெபஞ்செய்து காணிக்கையை படைக்கலாம் அல்லது பின்வரும் ஜெபத்தைச் செய்யவும்:

(1)

எல்லா நல்வரங்களையும் தரும் கடவுளே, உமது ஜனத்தின் காணிக்கையைத் தயவாய் ஏற்றுக்கொண்டு, அதையும் உமது ஜனத்தையும் ஆசீர்வதித்து, சமாதானமும் பிரியமும் உலகெங்கும் பெருகச்செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மூலமாய் வேண்டுகிறோம். ஆமென்.

அல்லது (2)

எங்கள் பரம பிதாவாகிய எல்லாம் வல்ல கடவுளே, உமது சொந்த குமாரன் என்றும் பாராமல் எங்களுக்காக அவரைத் தந்துள்ளீர் அவரும், அவர் மூலமாக எல்லாவற்றையும் எங்களுக்கு இலவ

யாகத் தந்துள்ளார். நாங்கள் இங்குக் கொண்டுவந்து உமக்குப் படைக்கும் காணிக்கைகளைத் தயவாய் ஏற்றுக்கொள்ளும். ங்களது எல்லா வரங்களோடும் நாங்கள் எங்களை உமக்கு ஒப்பு க்கப் பலம் தாரும். சரீரம், ஆத்துமா, ஆவியுடன் நாங்கள் ண்மையாகவும் சுயாதீனத்துடனும் உம்மைச் சேவித்து, உமக்குச் செய்யும் ஆராதனையில் எங்கள் ஆழ்ந்த மகிழ்ச்சியைக் காணச் செய்ய வேண்டுமென்று எங்கள் ஆண்டவர் இயேசுகிறிஸ்து ின் மூலம் வேண்டிக்கொள்ளுகிறோம். ஆமென்.

ஆராதனை நடத்துபவர் ஆசீர்வாதம் கூறிச் சபையாரை அனுப்புவார்.

ரு பாட்டுப் பாடலாம்.